**செய்தி வெளியீடு எண்: 422** **நாள் : 21.08.2015**

**மின் ஆளுமை இயக்ககம்**
**எண்.5/9 கவிஞர் பாரதிதாசன் சாலை,**
**ஆழ்வார்பேட்டை, சென்னை–18.**

# குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான தமிழ்நாடு மின் ஆளுமை விருது 2015-2016

அரசாணை (டி) எண் 5, தகவல் தொழில் நுட்பவியல் (பி3 ), துறை நாள் 26.02.2015 ன் படி தமிழக அரசு, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான தமிழ்நாடு மின் ஆளுமை விருதினை அறிவித்துள்ளது. இவ்விருதின் நோக்கமானது மக்களுக்கான சேவைகளை ஏற்று நடத்த மென்பொருள் பயன்பாடுகளை உருவாக்கும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோரின் சமூக பொறுப்புணர்வை மதித்து அங்கீகாரம் அளிப்பதாகும்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான தமிழ்நாடு மின் ஆளுமை விருது 2015–2016-க்கு கீழ்கண்ட பிரிவுகளின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

(i) பல்வேறு துறைகளில் சிறந்த மின் ஆளுமை மென்பொருள் பயன்பாடு
(The best e-Governance Application in different sectors)

(ii) மக்களுக்கான மின் ஆளுமை சேவைகள் வழங்கும் சிறந்த கைப்பேசிக்குறிய மென்பொருள் பயன்பாடு
(The Best e-Governance application for mobile/citizen centric services)

(iii)சிறந்த தொழில்நுட்ப கண்டுபிடிப்பிற்கான மின் ஆளுமை விருது
(e-Governance award for Best Technology Innovation)

மேற்காணும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த இரு விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில அளவிலான விருது மற்றும் ரொக்கப்பரிசு வழங்கப்படும்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை ஆன்லைனில் மட்டுமே அனுப்பவேண்டும்.மேலும், இவ்விருதிற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான உரிய படிவம் www.tnega.in என்ற இணையதள முகவரியில் உள்ளது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசி நாள் **30.09.2015.**

மேலும் விவரங்களுக்கு http://www.tnega.in என்ற இணையதள முகவரியில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**